**செய்தி வெளியீடு எண் : 1427** **நாள் : 17.08.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

## மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (17.08.2022) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளுடன் காணொளி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (17.08.2022) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளுடன் காணொளி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர்/பகிர்மானம் திரு.மா.சிவலிங்கராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.08.2022 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மின்னகம் – மின் நுகர்வோர் சேவை மையத்தில் ஆய்வு மேற்கொண்டபோது அறிவித்ததின்படி, தமிழ்நாடெங்கும் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தனித்தனியாக அதிகாரிகளை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் நியமித்திருக்கிறது. அதன்படி, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு செயற்பொறியாளரும், மாண்புமிகு அமைச்சர் ஒவ்வொருக்கும் ஒரு மேற்பார்வை பொறியாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரையும் அந்தந்த பகுதிக்கு நியமனம் செய்யப்பட்ட செயற்பொறியாளரும், மாண்புமிகு தமிழக அமைச்சர்களை அந்த மாவட்டம் சார்ந்த மேற்பார்வை பொறியளாரும் வாரந்தோறும் தொடர்பு கொண்டு மக்களின் குறைகள் மற்றும் தேவைகளை கேட்டறிந்து அதற்கேற்றவாறு செயல்படுமாறு மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி உறுப்பினரையும் மற்றும் அமைச்சர்களையும் வாரிய அதிகாரிகள் நேரடியாக சந்திப்பதன் மூலம் மக்களின் குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படும். மேலும், ஒவ்வொரு தொகுதியிலும் மக்களின் தேவை அறிந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் செயல்பட முடியும். இதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு தங்கு தடையில்லா மின்சாரத்தை தொடர்ந்து வழங்க முடியும்.

நிறுவப்படும் புதிய மின்மாற்றிகள் மற்றும் புதிய வாரியக் கட்டிடங்கள் ஆகியவற்றை அந்த தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரைக் கொண்டு திறந்து வைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து அலுவலர்களையும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், மாதந்தோறும் ஒவ்வொரு துணை மின் நிலையத்தில் எடுக்கப்படும் மின்நிறுத்தம் பற்றியும், அதனால் மின்தடை ஏற்படக்கூடிய பகுதிகள் பற்றியும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முன்கூட்டியே தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாட்டு மக்களுக்கு தரமான தடையில்லா மின்சாரத்தை வழங்குவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மறுசீரமைக்கப்பட்ட மின் விநியோக திட்டத்தின் கீழ் தற்போது தமிழ்நாடு மின் கட்டமைப்பில் உள்ள 13.5 சதவீத Line

loss–ஐ குறைப்பதற்கு முதற்கட்டமாக இந்த வருடத்தில் கீழ்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

1. விவசாய மின் இணைப்புகள் இணைக்கப்பட்டுள்ள 1,686 பீடர்களில் 475 பீடர்களை விவசாய மின் இணைப்புகள் மட்டும் கொண்ட பீடர்களாக 1523.47 கோடி ரூபாய் செலவில் பிரித்தல்.
2. 273 பீடர்களில் உள்ள உயர் திறன் கொண்ட மின்மாற்றிகளை பிரித்து அதன் முதற்கட்டமாக 99 பீடர்களில் ரூ.534.86 கோடி ரூபாய் செலவில் குறைந்த திறன் கொண்ட மின்மாற்றிகளை அந்தந்த இடங்களில் நிறுவுதல்.
3. 13,892 இடங்களில் உள்ள இரட்டை மின்மாற்றிகளில் முதற்கட்டமாக 3,207 இடங்களில் உள்ள மின்மாற்றிகளை பிரித்து குறைந்த திறன் கொண்ட மின்மாற்றிகளை ரூ.242.26 கோடி செலவில் நிறுவுதல்.
4. 532.08 கி.மீ. தூரத்திற்கு இருக்கக்கூடிய பழைய மின்கம்பிகளை முதற்கட்டமாக 206.50 கி.மீ. தூரத்திற்கு ரூ.15.41 கோடி ரூபாய் செலவில் புதிய மின்கம்பிகளாக மாற்றுதல்.

மொத்தம் ரூ.2,038.79 கோடி ரூபாய் செலவில் இந்தப் பணிகள் வருகின்ற 31.3.2023–க்குள் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றன. இதேபோன்ற பணிகள் ஒவ்வோரு வருடமும் எடுக்கப்பட்டு, வருகின்ற 31.03.2025–க்குள் அனைத்துப் பணிகளும் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் அனைத்தும் முடிவுற்றவுடன் தமிழ்நாடு மின் கட்டமைப்பில் நிலவி வரும் Line Loss ஆனது 11.92 சதவீதமாக குறையும்.

இதுதவிர, புதிய தொழில்நுட்பத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் கொண்டு வருவதற்காக பல சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அவற்றில் ஒன்றாக, ஒவ்வொரு வயர்மேன், லைன்மேன், போர்மேன் ஆகியோர்களுக்கு பயன்படும் வகையில் மின் பகிர்மான கழகத்தின் தகவல் தொழில்நுட்பத் துறை புதிய செயலி ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் அந்தந்த பகுதியைச் சார்ந்த

வயர்மேன், லைன்மேன், போர்மேன் ஆகியோர்களுக்கு மின் இணைப்பு துண்டிப்பு, மறு இணைப்பு, மீட்டர் மாற்றுதல், விகிதப்பட்டி மாற்றுதலுக்கான செக் ரீடிங் மற்றும் புதிய மின் இணைப்பு கொடுத்தது பற்றிய தகவல் நேரடியாக தலைமையகத்திற்கு கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படும்.

மின் நுகர்வோர் மின் கட்டணம் செலுத்துவதோடு மின்சாரம் பற்றிய புகார்களையும் தெரிவிக்க வழிவகை செய்யும் வகையில் செயலி ஒன்று உருவாக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இதேபோல், நுகர்வோர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் பட்சத்தில் அதற்காக ஏற்கனவே வசூலிக்கப்பட்ட கட்டணத்தில் பொருந்தும் தொகையானது உடனடியாக அவர்களின் வங்கிக் கணக்கில் ஆன்லைன் மூலம் திரும்ப கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன எனவும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

எதிர்வரும் மழைக்காலத்தில் மின் கட்டமைப்பில் ஏற்படும் சேதாரங்களை பொறுத்து சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் தளவாடப் பொருட்களுடன் சீரமைப்பு பணிகளை உடனடியாக மேற்கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்கு சீரான மின்விநியோகம் வழங்க வேண்டும் என்று அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மழைக்காலங்களில் பொதுமக்கள் மின்சாதனங்களை எச்சரிக்கையுடன் கையாளுமாறும், அறுந்து கிடக்கும் மின் கம்பிகளின் அருகில் செல்ல வேண்டாம் எனவும், அவ்வாறு அறுந்து கிடக்கும் கம்பிகளை கண்டால் உடனடியாக மின்சார வாரியத்திற்கு தெரியப்படுத்துமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

**பின்னர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் செய்தியளார்களிடம் பேசுகையில்,**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று மின்சார வாரியத்தின் சார்பில் முடிக்கப்பட்ட பணிகளான 16 துணை மின் நிலையங்கள் மற்றும் தரம்

உயர்த்தப்பட்ட மின் மாற்றிகளின் இயக்கத்தினை தொடங்கி வைத்தார்கள். அதன் பிறகு, மின்சார வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு ஆலோசனை மற்றும் உத்தரவுகளை வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட நுகர்வோர் மின் சேவை மையமான மின்னகத்தில் பத்து இலட்சத்து, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புகார்கள் பெறப்பட்டு, அதில் 99 சதவீதம் புகார்களுக்கான தீர்வுகள் உடனுக்குடன் காணப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்று (16.08.2022) நேரில் மின்னகத்திற்கு வருகை தந்து 10 இலட்சமாவது புகார் தெரிவித்த நபருடன் தொடர்பு கொண்டு பேசி அதனுடைய நடவடிக்கை குறித்து கேட்டறிந்து, அதன்பிறகு மின்னகத்திற்கு வரப்பெற்ற புகார்களையும் தொலை பேசியில் பேசி அந்த புகார் குறித்து கேட்டறிந்தார்.

மிக விரைவாக போர்க்கால அடிப்படையில் புகார்களுக்கு தீர்வு காணப்படுவது பொதுமக்களிடையே மிகப் பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. மேலும், தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளில் நடைபெறக்கூடிய மின்சார வாரிய பணிகளை விரைவுபடுத்த வேண்டும், வரக்கூடிய புகார்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும், ஒரு செயற் பொறியாளரும், மாண்புமிகு தமிழக அமைச்சர்களின் தொகுதிக்கு ஒரு மேற்பார்வை பொறியாளர் என சிறப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு புதிய திட்டங்களின் செயல்பாடுகள், அதை விரைவாக முடிப்பது குறித்த ஆலோசனைகள், அடுத்த 5 ஆண்டுகளுக்கு சட்டமன்ற தொகுதிகள் வாரியாக எடுத்துக்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், சிறப்பு அதிகாரிகள் தொகுதிகள் முழுவதும் நேரில் சென்று ஆய்வு செய்து அங்கு மக்களிடம் கலந்து பேசி மின்சார விநியோகம் முறையாக வழங்கப்படுகிறதா எனவும் பில்லர் பாக்ஸ்கள், கிராமப்புறங்களில் உள்ள மின்மாற்றிகள் மற்றும் துணைமின் நிலையங்களை தொடர்ந்து நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும் எனவும் அந்த பகுதிகளிலுள்ள மக்களுடன் கலந்து பேசி எந்த அளவிற்கு மின்விநியோகம் இருக்கின்றன, இன்னும் எந்த

அளவிற்கு சிறப்பாக செய்ய வேண்டும் எனவும் கேட்டறிந்து ஒரு வாரத்திற்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் சிறப்பு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன. இந்த வருடம் ஏறத்தாழ 2,300 கோடி அளவிற்கான திட்டபணிகள் நடந்து கொண்டிருக்கிறது, அதையும் விரைவுபடுத்தி துரிதமாக வேலைகளை முடிக்க வேண்டும், பணிகள் விரைவாக நடைபெறுவதற்காக தொகுதி வாரியாக குறிப்பாக ஆளும் கட்சி, எதிர்கட்சி என்று வித்தியாசம் பார்க்காமல் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் நேரில் சந்தித்து, நடைபெறக்கூடிய மின்சார வாரிய பணிகளை விரைவுபடுத்துவது குறித்தும், முடிவுற்ற பணிகளை இயக்கத்திற்கு கொண்டுவர அவர்களுக்கு அழைப்பு விடுப்பது குறித்தும், மின்சார வாரியம் சார்பாக எடுக்க மற்றும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் சிறப்பு அதிகாரிகள் கலந்து ஆலோசித்து தேவையாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் இதுவரை ஓராண்டில் 28,085 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன.

வருகிற 5 ஆண்டுகளில் முடிக்க வேண்டிய திட்டப்பணிகள் குறித்த தொலைநோக்குப் பார்வையோடு விரைவாக முடித்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். மின்சாரம், சூரிய மின் சக்தி, காற்றாலை மூலம் பெறப்பட்ட மின் உற்பத்தி இந்த ஆண்டு முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்கு முன்பு சூரிய மின் சக்தி, காற்றாலை மின் உற்பத்தியாளர்களை சந்தித்தபோது மின்சார வாரிய வரலாற்றிலேயே இந்த ஆண்டில் தான் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தங்களுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டனர். ஒரு யூனிட் கூட வீணாகவில்லை என்றனர். சென்னை மாநகராட்சியை பொறுத்தவரை, பணிகள் மின்சார வாரிய ஊழியர்களுடன் ஒருங்கிணைந்து நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் சீர்திருத்த நடவபடிக்கைகளால் மின்சார வாரியத்திற்கு கடந்த வருடம் 2,200 கோடி அளவிற்கு வட்டி மற்றும் இதர இனங்கல் மூலம் சேமிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, கடந்த ஆண்டுகளைப் போல் கடன் அதிகரிக்காமல் இருப்பதற்கு நிர்வாகத்தின் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இலவச திட்டங்கள் என்பது அடித்தட்டு மக்களுடன் கரம்கோர்த்து அவர்களுடைய வாழ்க்கை தரத்தினை உயர்நிலைக்கு அழைத்து செல்வதற்காகத்தான் செயல்பட்டுவருகின்றன. சாதாரணமாக, 100 யூனிட் இலவச மின்சாரம் பயன்படுத்துவபவர்களுக்கு இலவச திட்டங்களே இருக்கக் கூடாது என்பது ஏற்புடையதல்ல. விவசாயிகளின் வாழ்க்கையில் என்ன மிச்சம் பண்ண முடியும். உற்பத்தி பொருள் அதிகமானால் பொருள் குறைந்தால், விலை அதிகரிக்கும். அவர்களுடைய முதலீட்டிற்கும், கடைசியாக இருக்கக்கூடிய வருமானத்தையும் பார்க்கும்போது மிகப் பெரிய இழப்பை சந்திக்ககூடிய நிலை இருக்கும். அதனால் தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்காக இலவச மின்சாரம் திட்டத்தினை கொண்டு வந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பினை வழங்கினார்கள். விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர வேண்டும். ஆனால், ஒன்றிய அரசை பொறுத்தவரை இலவச திட்டங்கள் வேண்டாம் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரை பொறுத்தவரை ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் இலவச திட்டங்கள் உறுதியாக தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார்.

ஏற்கெனவே சட்டமன்றத்தில் 3 கோவில்களின் தேரோடும் வீதிகளில் புதைவட கம்பிகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. நீலகிரியில் உள்ள பார்சன்வேலி குடிநீர் திட்டத்திற்காக புதைவட கம்பிகள் அமைக்க கோரியுள்ளனர். நீலகிரியில் மரங்கள் அடிக்கடி சாய்வதினால் மின் விநியோகம் பாதிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் தடைபடுகிறது.

அதற்கான திட்ட மதிப்பீட்டினை தயாரித்து அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சுற்றி புதைவட கம்பிகள் அமைக்கும் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும். சென்ற இரு வாரங்களுக்கு மேல் மழை பெய்ததால் பாதிக்கப்பட்ட இடங்களில் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 24 மணி நேர மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் ஆய்வு மேற்கொணடார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in